**Kalanjiyam International Journal of Tamil Studies**
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# The Charitable Virtue of Patron Pari

**Dr. M. Nagarajan*,**

*Assistant Professor, Francis Xavier Engineering College, Vannarpettai, Tirunelveli - 627003, Tamil Nadu, India.*

*Correspondence: nagarajan1481@gmail.com , Tel: +919626331257

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** Food, clothing, and shelter are the fundamental needs of a human being. Recognizing these as the primary necessities of life, people throughout history have lived accordingly. Those unable to fulfill these needs sought out kings and individuals known for their charitable virtues (Kodai Aram) to secure their basic livelihood. These patrons gave generously without hesitation to those who approached them. This reflects the noble character of the Tamils, who lived selfless lives without prioritizing personal gain. Understanding that wealth is transient, people integrated the virtue of charity into their daily lives. Based on this principle, people continue to study and practice the life ethics portrayed in the literature created by Tamil poets. Literature reveals that people believed a transient life could be given lasting meaning through virtuous conduct, making charity an inseparable part of their existence.

Kings stood at the forefront of this charitable tradition. Sangam literature highlights their noble nature; they not only provided the necessary resources for a prosperous life to impoverished poets who sought them out but would also personally escort them upon their departure. Furthermore, common people—guided by the advice of Tamil scholars—offered whatever help they could to others. Gratitude was a cornerstone of this society. Forgetting a favor was considered a grave error; people lived without ever forgetting the good deeds done by others during their times of need. The entire land knows of Kabilar, the scholar and close friend of Pari, who lived as a testament to this unyielding gratitude. Just as birds naturally flock to a tree laden with ripe fruit, people sought out kings with great hearts to receive patronage, as evidenced by literary records. Charity was not strictly defined by a single act; rather, helping others to the best of one's ability is defined as "help" or "gift." In this regard, it is evident that ancient Tamils lived with a spirit of service from the very dawn of their civilization. Through Tamil literature, we see that despite the division of land into five landscapes (Kurinji, Mullai, Marutham, Neithal, and Paalai), the Tamil people remained altruistic, extending their support to those from across all regions.

**Keywords:** Poets, Virtuous Character, Charitable Virtue, Kodai Aram, Pari, Scholars, Saandror, Kabilar, Parambu Hill, Humanism.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# வள்ளல் பாரியின் கொடை அறம்

**முனைவர்மு.நாகராஜன்,** உதவிப்பேராசிரியர், பிரான்சிஸ்சேவியர் பொறியியல் கல்லூரி,

திருநெல்வேலி,வண்ணாரப்பேட்டை- 627003 , தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் அடிப்படைத்தேவை உணவு,உடை,உறைவிடம். இவற்றையே தன் வாழ்விற்கு முதன்மையானது என்பதை உணர்ந்து வாழ்ந்து வந்தனர்..இவற்றை பூர்த்தி செய்ய முடியாத மக்கள் கொடையறம் கொண்ட மன்னர்களையும்,மக்களையும் நாடிச் சென்று தம் வாழ்வின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொண்டனர்.தம்மைநாடி வந்தவர்களுக்கு முகம் சுழிக்காமல் கொடுத்தனர்.தனக்கு வேண்டும் என்ற சுயநலம் இல்லாத வாழ்வை வாழ்ந்து வந்த தமிழர் மாண்பை உணர்ந்து கொள்ள முடிகிறது.

செல்வம் என்பது நிலையில்லாதது என்பதை உணர்ந்த மனிதர்கள் தம் வாழ்வில் கொடை என்ற அறப்பண்பைக் கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர். இதனை அடிப்படையாக் கொண்டே தமிழ் புலவர்கள் படைத்த இலக்கியங்கள் மூலம் வாழ்வியல் அறங்களைப் படித்து மக்களும் தம் வாழ்வில் கடைப்பிடித்து வருகின்றனர். அறப்பண்பினை அடிப்படையாகக் கொண்டு வாழ்வை நடத்திச் சென்றால் நிலையில்லா வாழ்வை வென்றெடுக்க முடியும் என்பதை உணர்ந்த மக்கள் கொடை என்ற குணத்தை நம் வாழ்விலோடு பின்னிப்பிணைந்த தாகக் கருதி வாழ்ந்துள்ளமை இலக்கியங்கள் வழியாகப் புலனாகிறது. கொடையறத்தில் முதன்மையாகத் திகழ்ந்தவர்கள் மன்னர்களே.தன்னை நாடிவரும் வறுமையற்ற புலவர்களுக்கும் வளமான வாழ்விற்குத் தேவையான பொருட்களைக் கொடுத்து தானே சென்று வழியனுப்பும் நற்குணத்தின் இயல்பினை சங்கஇலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. சராசரிமக்களும் தங்களால் இயன்ற உதவிகளைத் தமிழ் சான்றோர்களின் அறிவுறுத் தலின்படி தன்னால் இயன்ற அளவு பிறருக்கு உதவி செய்து வாழ்ந்தார்கள் என்பதைக் காணமுடிகிறது.

நன்றிமறப்பது தவறு. ஒருவர் வறுமையற்ற பொழுது பிறர் கொடுத்துத வியநல் வினைகளை என்றும் மறவாமல் வாழ்ந்தனர். நன்றி மறவாமல்வாழ்ந்து வந்தசான்றோன் பாரியின் உற்றநண்பர் கபிலர் என்பதை நாடறியும். பழுத்தபழங்கள் உள்ள மரங்களை நாடி பறவைகள் வருவது இயல்பு. அதுபோல உயர்ந்த நல்லுள்ளம் கொண்ட மன்னர்களிடம் சென்று பொருள்களைப் பெற்றனர். என்பதை இலக்கியங்கள் வழி அறியலாம். கொடை என்பது இதுதான் என்று வரையறுக்கப்படவில்லை. தன்னால் பிறருக்கு இயன்ற அளவு உதவுவது உதவி அல்லது கொடை

எனலாம். இந்தவகையில் பழந்தமிழர்கள் நாகரீகம் தொடங்கிய காலத்திலேயே பிறருக்கு உதவி செய்து வாழ்ந்து வந்தனர் என்பதை அறியலாம். நிலத்தின் தன்மையைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என வகுக்கப்பட்ட தன் அடிப்படையில் வேற்று நிலத்தவர்களுக்கு உதவும் பொதுநலம் மிக்கவர்கள் தமிழர்கள் என்பதை தமிழர் இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகிறது.

**கரு சொற்கள்:** புலவர்கள், அறப்பண்பு, கொடையறம், பாரி, சான்றோர்கள், கபிலர், பறம்பு மலை, மனிதநேயம்.

**முன்னுரை**

மனித இனம் காடுகளில் வசிக்கும் காலத்திலேயே வீரத்தோடும் அறத்தோடு வாழ்ந்துவந்தனர். இதனையே குறிஞ்சி திணை வாழ்வென்று சிறப்பித்துக் கூறுகிறோம். தமிழர் தன் வாழ்வை அகம் புறம் எனப் பிரித்துக் கொண்டனர்.அகவாழ்வு களவு கற்பு என்னும் காதல் வாழ்வில் அன்பின் வாழ்வை எடுத்துரைக்கிறது. புறம் என்பது தமிழரின் வீரம் மற்றும் கொடைச் சிறப்பை எடுத்துரைப்பதாக அமைகிறது.தமிழன் அன்றும் இன்றும் அகவாழ்விலும் புறவாழ்விலும் அறத்தையே கடைப்பிடித்து வாழ்ந்து வந்துள்ளான்.இதனை,சங்க இலக்கியங்கள் முதலானபழந்தமிழ்இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. இல்லாதோருக்கு ஈந்து அளிக்கும் கொடை என்பது அறங்களில் சிறந்ததாகும்.இக்கொடையறத்தைக் கடைப்பிடிப்போரை வள்ளல் என்பர். தமிழ்ப் பரப்பில் கடையெழு வள்ளல்களாக அறியப்படுபவர்கள் பாரி, காரி, ஓரி, ஆய், அதியன், நள்ளி, பேகன், அதியன் என்பவர்களாவர்.இதில் பாரி என்னும் பார்போற்றும் வள்ளல் குறித்தும் அவனது கொடைச்சிறப்பு குறித்தும் விவரித்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**ஆய்வுமுறை**

இயந்திரமயமான உலகில் வாழும் மனிதர்களிடையே அறப்பண்புகளை வளர்க்கும் நோக்கில் பாரியின் கொடை அறம் என்னும் தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்காகக் கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரியின் கொடையறம் குறித்து வாசித்து அறியப்பட்டது. இதற்கு ஆதாரமாக விளங்கும் பல்வேறு மன்னர்களின் கொடை சிறப்பைக் கூறும் ஆற்றுப்படை நூல்கள் மற்றும் பிற நூல்களும் வாசித்து அறியப்பட்டது. இக்கட்டுரையின் பொருண்மைக்கு வலுசேர்க்கும் வகையில் பிற வள்ளல்களின் கொடையறம் இங்கு ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது. இதன் மூலம் மனிதர்கள் ஒருவருக்கொருவர் ஈகைப் பண்பைக் கடைபிடித்து வாழ்தல் சிறந்தது என்பதை அறியமுடிகிறது. பாரியின் சிறப்பைப் பாடும் புலவர்களது பாடல்களைத் தந்து அதற்கேற்ற விளக்கமும் தரப்பட்டு ஆய்வின் பொருள் விளக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் கருத்துக்கள் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் நிலையற்ற செல்வத்தை நாடிச் செல்லாமல் இல்லாதவருக்குக் கொடுத்து வாழ வேண்டியதன் அவசியத்தைச் சுட்டுகிறது.

**வள்ளல்பாரி**

பாரி பறம்பு மலையைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி செய்து வந்த கடைச் சங்கத்தைச் சேர்ந்த மன்னன்.பறம்பு நாடு முந்நூறு ஊர்களைக் கொண்டது, தற்பொழுது சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பிரான்மலை பகுதியைக் குறிப்பதாகும்.பாரியின் புகழ் பற்றிக் கபிலர் போன்ற. பலரும் பாடியுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. "தமிழரின்வாழ்வைகாதலும்வீரமும்என்றுசொல்வதைவிடவீரமும்கொடையும்என்றுகூறுவதுதான் பொருத்தமாகஇருக்கும்என்றுநான்நினைக்கின்றேன்" (சரவணன் ப., 2015)என்னும் கூற்றுக்கு ஏற்ப வாழ்ந்தவன் பாரி.

முல்லைக்குத்தேர்தந்தவன்பாரிஎன்பதுஅறிந்தவரலாறு.பாரி தான் பயணித்து வந்த தேரை கொடுத்தாரா அல்லது உடைந்ததேரைக் கொடுத்தாரா என்பது குறித்த பல்வேறு விவாதங்கள் இந்நாட்களில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும், எனினும் பாரி மன்னன் மரம் செடி கொடிகளிடம்கூட இரக்க குணம் கொண்டவனாக சிறந்து விளங்கி உள்ளான் என்பது புலனாகிறது. பாரிமன்னன்தன்வலிமையானவேலினையும்திரண்டவலிமையானதேரையும்கொடையாகக்கொடுத்த வன்என்பதைகபிலர்,

*"கூர்வேல்குவைஇயமொய்ம்பின்*

*தேர்வன்பாரிதன்பறம்புநாடே"* (*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்னும் வரிகள் மூலம் எடுத்துரைக்கிறார். இத்தகைய தன்னிகரில்லா கொடைச் சிறப்பை தமிழ் மன்னர்கள் கொண்டிருந்தனர். பல்வேறு இலக்கியங்கள் அதற்கு சான்று பகர்கின்றன. *"தமிழ் மொழியில் காணப்படும் ஆற்றுப்படை போன்ற இலக்கிய அமைப்பு உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை. மனிதாபிமான உணர்வை வெளிப்படுத்துவன மனிதமன உணர்வுகளை இந்தஅளவிற்கு வேறுமொழிகள் சொல்லவில்லை" (சாரங்கபாணி இரா., 2013)*என்னும் கூற்று இங்கே ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**இனிமையானகுணம்கொண்டவன்**

பாரி மன்னனை யாராலும் வெற்றிப் பெறமுடியாது என்பது உலகறிந்த ஒன்று. அப்படி அண்டை நாட்டை ஆண்டமன்னர்களுக்குக்கொடியவனானஅதாவதுவலிமையானவனாகஇருந்தாலும் பரிசில் பெற வருவோருக்கு மிக இனியவனாகவும் அன்பானவனாகவும் நடந்துகொள்வான். இதனைக் கபிலர்,

*"அண்ணல்யானைவேந்தர்க்கு*

*இன்னால்ஆகியஇனியோன்குன்றே"* (*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் பாரி தன்னை நாடி வருபவர்களிடம் இனிமையாகப்பேசும்பண்புடையவன்என்பதைஉணர்ந்துகொள்ளமுடிகிறது. "மனிதநேய வெளிப்பாடு உடனே செயலுக்கு வருவது பசியென வந்தவருக்கு உணவளித்தலினால் ஏற்படுவதாகும். பழந்தமிழகத்தில் விருந்தோம்பல் சிறந்த பண்பாடாக அமைந்தது" (சாரங்கபாணி இரா., 2013) என்னும் கருத்துக்கு ஏற்ப கொடை அறத்தைக் கடைப்பிடிக்கும் போது அன்பையும் நட்பையும் அகமனதோடு பிறரிடம் காட்ட வேண்டும்.

*"நெஞ்சத்துஅகநகநட்பதுநட்பு"*(*கிருஷ்ணன்.பெ.,2003)*

என்றவள்ளுவரின்வாக்கிற்கேற்பபாரிமன்னன்உள்ளன்போடுநட்புகொண்டவன்என்பதும்புலனாகிறது.

மழைக்கு ஈடானவன் அறக்கொடை பாரி

இந்த உலகம் மழையில்லாமல் இயங்காது.இதனை வள்ளுவர்,

"நீரின்றி அமையாது உலகு"(*கிருஷ்ணன்.பெ.,2003)*

என்று சுட்டுகிறார். இந்த உலகில் நீர் இல்லாமல் போனால் உலகில் உள்ள உயிர்கள் வாழ முடியாது என்பதை உணர்த்தியுள்ளார்.அத்தகைய நீரை உலகிற்குவழங்கும் மழைக்கு ஈடாக அற உணர்வோடு பாரி பரிசில் வழங்கிதாகக் கபிலர் புகழ்ந்து பாடி உள்ளதை அறிந்து கொள்ளமுடிகிறது. இதனை,

"பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே"
(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்னும் வரிகள் மூலம் எடுத்துரைக்கின்றன. உலகத்தைப் பாதுகாக்க மழைநீர் போல் பாரி மன்னன் தன் நாட்டு மக்களைப் பாதுகாக்க வாரி வழங்கி வந்த அறப்பண்பின் குணத்தினை அறிந்துகொள்ள முடிகிறது. "உணவு நாடி எறும்புகள் செல்வது போல பரிசினை நாடி புலவர்கள் அரசன் இருக்குமிடம் தேடிச் செல்வர் இதில் இன்னார் இனியார் என்ற வேறுபாடு அவர்களிடத்தில் இல்லை" (சாரங்கபாணி இரா., 2013) என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**படைவீரரும் கொடையை அறிந்து வியந்துநிற்றல்:**

பாரியுடன் போரிட வந்த வீரர்கள் பாரியின் கொடைத் தன்மையையும் அவன் நாட்டின் சிறப்பையும் அறிந்து போர் புரியாமல் பாரின் அழகிய குதிரைகளை எண்ணிப்பார்த்து அதிசயித்துப் போனார்கள். இதனை,

*“அருமைஅறியார்போர்எதிர்ந்துவந்த*

*வலம்படுதானைவேந்தர்*

*பொலம்படைக்கலிமாஎண்ணுவோரே”(சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்றுக பிலர் விதந்தோதுகிறார். ஒரு நாட்டின் மன்னன் பிறிதொரு நாட்டின் மீது படையெடுத்து வருகிறான் என்றால் அந்நாட்டின் செல்வங்களை அள்ளிக் கொண்டு செல்வதும் எஞ்சினவற்றை அழித்து செல்வதுமே அவனது நோக்கமாக இருக்கும். இதையே அவனது படை வீரர்களும் செய்வர். எனினும் பாரியின் நாட்டிற்குப் படையெடுத்து வந்த மன்னனின் போர் வீரனோவென்றால் பாரியின் வள்ளல் சிறப்பைக் கேள்வியுற்று மலைத்துப் போனான். இது பாரி தன் எதிரியின் உள்ளத்தைக் கூடக் கவரத்தக்கவகையில் வள்ளல் தன்மையில் சிறந்து விளங்கியவன் என்பது தெளிவாகிறது.

போரில் வெற்றி பெற முடியாததைப் பாட்டால் வெற்றி பெற்றல்:

அதிகாரத்தால் உலகை ஆண்டு விடலாம் என்பதை விட அன்பால் உலகை ஆளுவதே சிறப்பு. அவ்வண்ணம் போரில் வெல்ல முடியாத பாரியைப்புகழ்ந்து பாடியே வெல்ல முடியும் என்பதை விறலியர் நிரூபித்துள்ளனர்.வலிமைமிக்க வேல் படையால் வெற்றி பெற முடியாத பாரி மன்னனை நீல மலர் போன்ற கண்களை உடைய பெண்கள் தோல் பறை அடித்தும் புகழ்ந்து பாடியும், போரினால் வெல்ல முடியாத பரம்பு மலையைப் பாடியவுடன் கொடையாகப் பாரி அளித்தான் என்பதை,

“.........................பேர் இருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்கோ அரிதே
நீலத்து இணைமலர் புரையும் உண்கண்
இணை மகட்கு எளிதால் பாடினள் வரினே”

(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்ற கபிலரின் வரியால் அறியமுடிகிறது. மன்னனின் வீரவாளினும் வலிமைமிக்கது தமிழ்ப்பாடல் வரிகள் என்று கூறும் கபிலரின் பாடல் நமக்குச் சான்றுரைக்கிறது. இதனை, *“சங்க இலக்கியங்களில் பண்டை மக்களிடையே நிலவிய சில அறம் பற்றிய நம்பிக்கைகளைக் காணமுடிகிறது. பிறப்பால் அருளுள்ளம் கொண்ட கொடை செய்பவருக்கே போரில் வெற்றிகிடைக்கும்” (சாரங்கபாணிஇரா., 2013)* என்று சிறப்பிக்கும் இக்கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**இரவலர்க்குக் கொடுக்கும் வள்ளல்:**

பிறருக்கு கொடுப்பதைப் பிறவிக் குணமாக கொண்டவன் பாரி. கேட்காமலேயே முகம் வரைந்து கொடுக்கும் திறன் படைத்த பாரிடம் இறந்து கேட்போருக்கு இல்லை என்று சொல்லாமல் இருப்பதை கொடுத்து வந்தான். ஆற்றுப்படை நூல்கள் அவ்வாறு பரிசளித்த மன்னர்களின் சிறப்பை எடுத்துரைக்கிறது. குறிப்பாக, *“பாட்டுடைத் தலைவனின் குலச்சிறப்பு அறச்சிறப்பு வீரச்சிறப்பு*

*நாட்டு மக்களின் இயல்பு அவன் நாடு செல்லும் வழியில் இயல்பு அவனைக் கண்டால் கிடைக்கும் பரிசுகள் போன்றன பற்றி உரைக்கப்படுகின்றன"(சாரங்கபாணி இரா., 2013).* அதற்கு ஈடான சிறப்பைப் பெற்றவனே பாரி.

நிழலேஇல்லாதகொடியவழியில்ஒரேஒருமரம்இருந்துவழிபோக்கரக்கு இளைப்பாற நிழல் தருவதைப் போல பாரி மன்னன் எந்தநாட்டு மன்னர்களும் வழங்க முடியாத அளவிற்கு இரவலர்க்குக் கொடுத்து உதவும் வள்ளல் தன்மை மிக்கவன்.இதனை,

*"நிழல்நீள்இடைத்தனிமரம்போல*

*பணைகெழுவேந்தரைஇறந்தும்*

*இரவலர்க்குஈயும்எள்ளியோன்நாடே"(சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. *"தொல் தமிழர்கள் தம் வாழ்வில் ஒருவேளை உணவுக்கும் கூட பல்வேறு போராட்டங்களை எதிர்கொண்டவர்கள். அப்படியிருக்க அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தம்மை நாடி வந்தோருக்கு மிகுதியாக உணவளித்துள்ளனர். அரும்பாடுபட்டு பெற்றஉணவினைப் பிறருக்கு வழங்கி மகிழும்பண்பு" (சரவணன் ப, 2015)* விதந்தோத தக்கதாகும்.

**விறலியர் பெற்ற அணிகலன்கள்:**

விறலியர் என்பவர்கள் பாடல் பாடி இசைத்து பரிசு பெறும் மகளிர் ஆவர்.பறம்பு நாட்டை ஆண்ட பாரி மன்னனைப் பாடி தங்களுக்குத் தேவையான அணிகலன்களை பெற்றனர். *"இரக்க உணர்வு உடையவர்களே மற்றவர்களுக்கு உண்மையாக உதவ முடியும் ஏழ்மையில் வாடும் கலைஞர்கள் வள்ளல்களால் வாழ்வில் ஆறுதலும் வளமான வாழ்வுக்குப்* பொருள்களையும்*பெறுகின்றார்கள்". (நீலகண்டப்பிள்ளைதா.,,2014)* இக்கூற்றுக்கு ஏற்ப பாரியிடம் விரலியர் பரிசு பெற்றனர். இதனை,

"சேயிழை பெறுகுவை வாள் நுதல் விறலி"

(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்னும் கபிலரின் பாடல் வரி மூலம் அறியமுடிகிறது. விறலியர் ஒழுக்க நெறியோடு சென்று பரிசினை பெற்றுள்ளனர் என்பது தெளிவாகிறது.

வலிமை இல்லாதவர்களுக்கும் புலமையில் குன்றியவர்களுக்கும் வாரி வழங்கும் வள்ளல்

தன்னை நாடி வருபவர்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும் பொருள் கொடுத்து உதவுவது தமிழர் அறப்பண்பு.அந்த வகையில் பாட்டால் தம்மைப் புகழ்ந்து பாடி பரிசு பெற முடியாதவர்களுக்கும் வீரத்தில்வலிமை இல்லாதவர்களுக்கும் வாரி வழங்கியஅறஉள்ளம் கொண்ட கொடை வள்ளல் பாரி என்பதை அறியமுடிகிறது. இதனை,

"மடவர் மெல்லியர் செல்லினும்

கடன் பாரி கை வண்மையே"(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்னும் பாடல் வரி மூலம் காணமுடிகிறது. இன்றைய நாளில் போட்டியில் கலந்து கொண்டு தகுதியான இடம் பெறாதவர்களுக்குக் கூட ஆறுதல் பரிசு வழங்கி சிறப்பிப்பதுண்டு. அது போன்று அன்றைய நாளில் பாரி மன்னன் தன்னை நாடி வந்த அனைவருக்குமே பரிசில் வழங்கி சிறப்பித்தமை இங்கு நாம் காணமுடிகிறது.

**முன்னூறு ஊர்களைப் பரிசளித்தல்:**

கடையெழு வள்ளல்களில் கொடை அறத்தில் சிறந்தவன் பாரி. "ஆற்றுப்படைநூல்கள்நலிந்தவர்களைவள்ளலிடம்ஆற்றுப்படுத்திபொருள்பெறச்செய்துஅவர்கள்வாழ்வில்ஒளியேற்றுவதைமையமாகக்கொண்டதாகும்" (சாரங்கபாணி இரா., 2013)அதில் கூட மன்னர்கள் தன்னை நாடி வந்தவர்களுக்குப் பொருள்களை மட்டுமே பரிசாக அளித்திருப்பர். பாரி அவர்களிலிருந்து சற்று வேறுபட்டவன். "மூவேந்தர்கள் என அழைக்கப்படும் சேர, சோழ, பாண்டியர்கள் மூவரும் சேர்ந்து வெல்ல முடியாத அளவிற்கு வலிமையான படையைக் கொண்டவன் பாரி.பாரியுடன் போரிட்டு அவனது ஒரு பிடி நிலத்தைக் கூட எடுத்து சென்று விட முடியாது. அப்படிப்பட்ட வீரமிக்கவனை நாடிச் சென்று அவன் புகழைப் பாடுவோருக்குத் தன் ஆளுமைக்குட்பட்ட முன்னூறூ ஊர்களைப் பரிசாக வழங்கியுள்ளான்.இதனைக் கபிலர்,

*"...........* மூவிரும் கூடி
உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கு அரிதே
முன்னூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்"(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்னும் பாடல் வரியின் மூலம் குறிப்பிட்டுள்ளார். தன்னை நாடி வரும் புலவர்களுக்குப் புத்தாடை தந்து விருந்தோம்பல் செய்து பின்னர் பாடவைத்து அணிகலன்கள் முதலான பரிசுகளைக் கொடுப்பது வழக்கம். தமிழ் மன்னர்கள் யாரும் செய்யாததை அதிலும் ஊர்களாகிய நிலங்களைப் புலவர்களுக்குக் கொடையாகத் தந்த ஈகைத் திறம் விதந்தோதத்தக்கதாகும். "கிபி 10 முதல் 13 ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் சோழர்கள் ஆட்சி வளர்ச்சியடைந்து நிலை பெற்றகாலம் அக்காலத்தில் வேத நெறி தழைத் தோங்குவதற்காக மன்னரும் மக்களும் புதிதாகக் குடிபுகுந்த பிராமணர்களுக்குப் பொன்னையும், குடியுரிமைகளையும், வாரிவழங்கினர். பிராமணர்களுக்குத் தனி நிலங்களும் முழுமுழுக் கிராமங்களும் தானமாக வழங்கப்பட்டன. அக்கிரமங்கள் அக்கிரகாரம், அகரம், சதுர்வேதிமங்கலம், பிரமதேயம் எனப்பல பெயர்களில் வழங்கப்பட்டன".(பிள்ளை.கே.கே.2001) இக்கூற்றின் மூலம் பழந்தமிழகத்தில் பாரி என்பவன் சாமானியர்களுக்கு நிலத்தைக் கொடுத்துள்ளான். பின்னர் வந்த மன்னர்கள் உயர் குலத்தினருக்கு மட்டுமே நிலத்தைப் பரிசு அளித்துள்ளனர். இதன் மூலம் பாரி வள்ளல் தன்மையில் என்றும் உயர்ந்தவன் என்பது நிரூபணமாகிறது.

பறம்பு மலையையே பரிசாகக் கொடுத்தவன்:

பாரி என்றாலே பறம்புமலை என்ற சிறப்பு உண்டு.அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த செல்வச் செழிப்புடன் நாட்டு மக்களைக் காத்து வந்தான். தன்னைப் புகழ்ந்து பாடி பரிசு வேண்டுவோருக்குப் பறம்புமலையை முழுவதுமாகப் பரிசாக வழங்குகின்ற மனிதப் பண்பு மிக்கவன் பாரி மன்னன்.தன்னிடம் உள்ள பொருள்கள் எல்லாம் வாரி வழங்கிய பின்பு மிச்சமாக உள்ளது அவனிடமிருந்த. பறம்புமலை மட்டுமே.அதையும் தன்னிடம் இரந்து கேட்போருக்குப் பகிர்ந்து கொடுத்துள்ளான்.இதனை,

"சாரல் வேங்கைப் பூஞ்சினை தவழும்
பறம்பு பாடினர் ரதுவே∴ அறம் பூண்டு
பாரியும் பரிசிலர் இரப்பன்" (*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்னும் வரிகள் எடுத்துரைக்கின்றன.தான் ஆண்ட சிறப்புக்குரிய மலையையே பரிசாக வழங்கிய பாரியின் கொடைத் தன்மை விதந்தோதக்கதாகும்.இது பாரி மன்னன் தமிழ் மீது வைத்திருந்த அதீத பற்றை எடுத்துக் காட்டுகிறது.

**பறம்பு நாட்டைக் கொடையளித்தல்**

நன்கு இழுத்து கட்டப்பட்ட நரம்பினால் ஆன சிறிய யாழை இசைத்தும் பாடல் பாடியடும் திறமை மிக்கவர்கள் விறலியர்கள். இவர்கள் மிக நீண்ட கூந்தலை உடையவர்கள். பாரி மன்னனின் போரின் வலிமையையும் உழவர்கள் உழவுத்தொழில் செய்யாமல் இருந்தாலும் வளம் குன்றாத இயற்கை வளத்தையும் பெற்றவன்.மூவேந்தர்களும் வெற்றிப்பெற முடியாதவன் பாரி.அப்படிப்பட்டவனைப் பாடி பறம்பு நாடு முழுவதையும் விறலியர் பெற்றுவிட்டார்கள். இதனை,

"மூவிரும் முற்றினும்
உழவர் உழா தன நான்கு பயன் உடைத்தே
*..............*
ஆடி நீர் பாடினிர் செலினே
நாடும் குன்றும் ஒருங்குஈ யும்மே"(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்னும் பாடல் வரி சுட்டுகிறது. "தன்னிடம் உள்ளதை மற்றவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கும் குணம் குறிப்பாக வறுமையுற்ற போதும் இருப்பதை கொடுத்து உதவும்குணம் போற்றுதலுக்குரியது" (சாரங்கபாணி இரா., 2013) என்னும் கூற்று இங்கே ஏற்புடையதாக அமைகிறது. நாடு முழுவதையும் இரவலர்க்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டான்.எனினும் அவற்றில் தன் நேரடி ஆதிக்கத்தைச் செலுத்தாமல் அதே வேளையில் நாட்டு மக்களைக் காக்கும் சிறந்த மன்னனாகவும் விளங்கினான் என்பதை அறியமுடிகிறது.

**கொடை வழங்கிய இடம்:**

பாரி மன்னனைச் சந்தித்து பரிசு பெற்று வரும் மக்கள் கூட்டம் தினந்தோறும் அதிகரித்து வந்தது.பரிசு பெற வேண்டி தெருக்களில் மக்கள் ஓயாமல் நடந்ததால் சேறும் சகதியுமாகிப்போனது. பாரியின் அரண்மனை முற்றத்தில் அவர்கள் வந்து கூடிய நிலையைக் கபிலர்,

“வார் அசும்பு ஒழுகும் முன்றில்
தேர் வீசு இருக்கை நெடியோன் குன்றே”(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்று காட்சிப்படுத்துகிறார்.இது பாரியின் கொடையறத்திற்குச் சான்று என்பதை அறிய முடிகிறது.

**பறம்புநாட்டுமக்களும்கொடையறம்கொண்டவர்களே:**

பாரியின் ஆளுகைக்குட்பட்ட பறம்பு நாட்டில் வாழ்ந்த தமிழ் மக்கள் வரகரிசிச் சோற்றை மணமிக்க நெய்கலந்துவறுத்த கடலை சேர்த்து குழம்பாக்கிவருபவர்களுக்கு வருத்த மின்றிகொடுக்கும் கொடைஉள்ளம் கொண்டவர்கள். 'பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்' என்பதற்கு ஏற்ப பாரியின் பறம்பு நாட்டு மக்களும் அவனது கொடைத்தன்மையைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர் என்பது புலனாகிறது.மறுநாள் வேண்டும் என்று சேமித்து வைக்காத கொடை உள்ளம் கொண்டவர்கள் என்பதை,

*“நறுநெய்கடலைவிசைப்பசோறுஅட்டுப்”*(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

*என்னும்பாடல்வரிசுட்டுகிறது.*

**கொடை அறத்தின் பிரதிபலன்:**

பாரி இறந்தப் பிறகு அவர்களது மகள்களைத் தம்மக்களாகக் கருதி அவர்களைத் திருமணம் முடித்து கொடுக்க எண்ணினார் கபிலர். இவர் பாரியின் உற்ற நண்பராகவும் அவைக்களப் புலவராகவும் இருந்தார். பாரி பிறருக்கு ஈகை செய்த தன் பிரதிபலனாக பாரியின் மகள்களுக்குத் தந்தைக்கு ஈடாகக் கபிலர் கிடைக்கப் பெற்றார். அவர்தாம் பெற்ற பிள்ளைகளைத் திருமணம் முடித்துக் கொடுக்க அலையும் தந்தையைப் போன்று பலமன்னர்களிடம் சென்று பாடிவரன் வேண்டினார். அதன்படி,

உயர்ந்த மலை உச்சியையும் செல்வச் செழிப்புமிக்க நாட்டை ஆளும் மன்னனே! போர்க் களத்தை எல்லாம் தனதாக்கி கொண்டு வெற்றிப் பெறும் மன்னனே. விச்சிக்கோவே அடக்க முடியாத அரசர்களை அடக்கும் நாட்டைக் கொண்டவனே நான் பரிசில் விரும்பும் புலவன் அல்ல. நெடிய தேரையே படர்ந்து கொள்வதற்காகத் தன்தேர் கொடுத்த பாரிமகளிரை மணமகளிராக நீ பெற்றுக் கொள்வாயாக என்று வேண்டினார்.இதை,

*“கறங்குமணிநெடுந்தேர்கொள்கைஎனக்கொடுத்த*
*பரந்தஓங்குசிறப்பின்பாரிமகளிர்*
*யானேபரிசிலன்மன்னும்அந்தணன்நீயே*

*வரிசையில்வணங்கும்வாள்மேம்படுநன்"(சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்ற வரிகளின் மூலம் அறிய முடிகிறது, நண்பன் மகளைத் திருமணம் செய்துவைக்கும் உயர்ந்த பண்பை உணர்த்துகிறார்.

இருங்கோவே என்னும் மன்னனிடம் சென்று பாரிமகளிரை மணமுடிக்க வேண்டினார். குறிப்பாக நான் பாரியின் நண்பன் அதனால் இவர்கள் என்மக்கள் ஏற்பாயாக என வேண்டியுள்ளார். இதனை,

*"தந்தைதோழன்இவர்என்மகளிர்"(சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்ற வரியின் மூலம் அறிய முடிகிறது. பாரிமகளிரை ஏற்கும்படியாக,நாற்பத்தொன்பது தலைமுறையாகது வரை நகரை ஆட்சிசெய்யும் வேளிர் மன்னனிடம் சென்று கேட்கிறார் கபிலர். இதனை,

*"உவராஈகைத்துவரைஆண்டு*
*நாற்பத்தொன்பதுவழிமுறைவந்த*
*வேளிருள்வேளே"(சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்னும்பாடல்சுட்டுகிறது.ஈண்டுபாரியின் கொடையறத் தின்பலனாக அவனது மகளிர் நன்னிலை அடைய வேண்டி நடைபெற்ற முயற்சியாகக் காணமுடிகிறது.

**அடுத்தபிறவியில்உன்னோடுபிரியாமைவேண்டும்:**

பாரியின் நண்பர் கபிலர் என்பது உலகறிந்த ஒன்றே. பாரி என்னைப் பேணிக்காத்த காலமெல்லாம் என்வாழ்வின் பெருமைக்குரிய காலம். என்னைஉன்னுடன் இறந்துபோக பொருத்தமற்றவன் என்று கூறிவிட்டு சென்றாய். இருந்தாலும் அடுத்த பிறப்பில் பிரியாத நட்புனைஉடையதாக இருக்கவேண்டும் என்கிறார் கபிலர். இதனை,

*"இம்மைபோலக்காட்டிஉம்மை*
*இடைஇல்கட்சிநின்னோடு*
*உடன்உறைவுஆக்குகஉயர்ந்தபாலே"(சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்று கண்ணீர் மல்க எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. முற்பிறப்பில் செய்த நற்பண்பு அடுத்த பிறப்பில் இருவர் நட்பும் கண்டிப்பாக அமையும் என்ற உறுதியோடு இருக்கும் உறுதிப் பண்பை உணர்ந்து கொள்ள முடிகிறது. மனித இனத்தின் தலை சிறந்த பண்புகளில் அறம் முதன்மை இடத்தைப் பெறுகிறது. இதனையே வள்ளுவர்,

"அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"(*கிருஷ்ணன்.பெ.,2003)*

என்று சுட்டுகிறார்.

*“போற்றுதல்என்பதுபுணர்ந்தாரைப்பிரியாமை”*

*(கலித்தொகை1137)*

மனித வாழ்விற்கு தேவையான பல அரிய கருத்துக்களின் மூலம் புலவர்கள் மன்னர்களை பாடல்களால் பாடி மகிழும் ஆட்சிக்குத் தேவையான அறங்களை கூறுதே தம்வாழ்வின் நெறியாக வாழ்ந்து வந்தனர் என்பதைஇலக்கியங்கள் வழி அறியமுடிகிறது பாரி மன்னன் மீது கொண்ட நட்பு என்று ம்பிரியாமல் இருந்தது இதனைக் கலித்தொகை மூலம் அறியலாம்

நல்லறத்தத்தின் வழியாக நாம் பிறருக்கு நன்மை செய்தால் அந்த நல்வினையின் பலனாக அவர்களுடைய சந்ததியினருக்கு நற்பலன்கள் கிடைக்கும்.இதை நம் முன்னோர்கள் அனுபவித்து படைத்துக் கொடுத்த இலக்கியங்கள் நமக்கு பல்வேறு சான்றுகள் பகர்கின்றன. சிலப்பதிகாரத்தின் முதன்மை கருத்துக்களான,

“அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்,
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்,
ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்”.(புலியூர் கேசிகன்,(1995)

என்பனவை ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

“பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்”(*கிருஷ்ணன்.பெ.,2003)*

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப ஒருவருக்கு நாம் காலையில் துன்பம் செய்தால் மாலையில் அத்துன்பம் நமக்கு வந்து சேரும் என்பது தெளிவாகிறது. இதன் அடிப்படையிலேயே நம் சந்ததியினருக்கு எந்த இன்னல்களும் ஏற்படக் கூடாது என்ற நோக்கில் பாரி மன்னன் பழி பாவத்திற்கு அஞ்சி கொடை அறத்தினை கடைப்பிடித்து வாழ்ந்து வந்துள்ளான் என்பதை அறியமுடிகிறது.

இதனையே ஆலத்தூர் கிழார் தமது புறநானூறு பாடல் வழியாக உணர்த்துகிறார். இதனை,

“நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்
செய்திகொன் றோருக்கு உயதிஇல்என
அறம் பாடின்றே”(*சுப்ரமணியன்சா.வே.,2010)*

என்ற பாடல் தெளிவுறுத்துகிறது. ஒருவர் நமக்குச் செய்யும் நன்றியை மறப்பது அறச் செயல் அல்ல எபதை அறிய முடிகிறது. ஈண்டு வள்ளுவரின்,

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"(*கிருஷ்ணன்.பெ.,2003)*

என்னும் குறள் ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

**முடிவுரை:**

சர்வாதிகாரத்தைக் கடைபிடித்து ஆட்சி புரிந்தவர்களின் வாழ்வும் இறப்பும் அத்தனை இனிமையானதாக இருந்ததில்லை என்பது வரலாறு. ஒரு மன்னன் எவ்வாறு மக்களிடம் மக்கள் தலைவனாக வாழ வேண்டும் என்பதை பாரியின் வாழ்க்கை எடுத்துக்காட்டுகிறது. நாட்டைக் கட்டிக்காக்கும் தலைசிறந்த மன்னனான பாரி தனது நாட்டு மக்களுக்கும் பிற நாட்டிலிருந்து வருவோருக்கும் பொருட்களை வாரி வழங்கிய திறன் மூலம் தமிழர்களின் கொடைச் சிறப்பை அறிந்துகொள்ள முடிகிறது. தமிழர் வாழ்வை அகம் புறம் எனப் பிரித்த நம் இலக்கிய முன்னோடிகள் புறத்தில் வீரத்தையும் கொடையையும் முதன்மைப்படுத்தி கூறியதன் அர்த்தம் இதன் மூலம் விளங்குகிறது. தன்னைப் புகழ்ந்து பாடிய புலவரான கபிலரைத் தன் சக தோழனாகக் கொண்ட நட்பு திறம் போற்றுதற்குரியது. மன்னன் மக்களுடன் சமமாகப் பழக வேண்டும். மனித உயிர்களுக்கு மதிப்பளித்தல் வேண்டும் என்பதை பாரியின் நட்பு திறம் உணர்த்துகிறது. மனிதனாகப் பிறந்த அனைவரும் அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை பாரியின் வாழ்க்கை காட்டுகிறது. வீரத்திலும் கொடையிலும் தன்னிகரில்லாத தலைவனாகப் பாரி வாழ்ந்துள்ளான். முல்லைக்குத் தேரைத் தந்து இயற்கையை நேசிக்கும் பண்பாளன் எனவும் வெளிப்படுத்தியுள்ளான். கொடை அறத்தின் பலன் நமக்கும் நம் சந்ததியினருக்கும் கிடைக்கும் என்பதற்கு பாரியின் மகள்களைத் திருமணம் செய்து வைத்த தன் நண்பனான கபிலரின் வாழ்வு சான்று காட்டுகிறது. இன்றைய தமிழர்கள் கொடை அறத்தைக் கடைப்பிடித்து வாழவேண்டும் என்பதன் அவசியத்தை இவ்வாய்வின் மூலம் அறிய முடிகிறது.

**மேற்கோள் நூற்பட்டியல் (Works Cited)**

[1]. **கிருஷ்ணன், பெ.** *திருக்குறள்*. பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2003.

[2]. **சாரங்கபாணி, இரா.** *சங்கத்தமிழ் வளம்*. மணிவாசகர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ், சென்னை, 2013.

[3]. **சரவணன், ப.** *சங்ககாலம்*. கிழக்கு பதிப்பகம், சென்னை, 2015.

[4]. **சுப்ரமணியன், சா. வே.** *சங்க இலக்கியம் எட்டுத்தொகை*. தொகுதி 3, சிதம்பரம், 2010.

[5]. **நீலகண்டப்பிள்ளை, தா.** *சங்கத்தமிழ் வாழ்வியல் அறம்*. செம்மூதாய் பதிப்பகம், சென்னை, 2014.

[6]. **பிள்ளை, கே. கே.** *தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்*. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2001.

[7]. **புலியூர் கேசிகன்.** *சிலப்பதிகாரம் (தெளிவுரை)*. பாரி நிலையம், சென்னை, 1995.